SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் பங்குனி 10 MAALAI EXPRESS ஹிஜ்ரி 1446 ரமலான் 23
மாநிலம் பயனுற!

மல்டிகலர் பைகள்



துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com
/maalaiexpressnews

● புதுச்சேரி ● திங்கள்கிழமை, மார்ச் 24, 2025 ● வெளியூர்: 25-3-2025, செவ்வாய்க்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 248 ● 8 பக்கம் ● ரூ.6

## நியாயமான தொகுதி மறுவரையறையை பெற்றிட

# தமிழக எம்.பி.க்களுடன் பிரதமரை சந்திக்க முடிவு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



**சென்னை, மார்ச் 24–**

தொகுதி மறுவரையறை விவகாரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து சட்டசபையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தொகுதி மறுவரையறை தொடர்பான கூட்டு நடவடிக்கை குழுக் கூட்டம் தொடர்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன். மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தி யதற்காகத் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்காகச் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே முதல்முறையாக தமிழ்நாடு சட்டசபையில் தான் தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

வட மாநிலங்களில் எந்த விகித்தத்தில் தொகுதிகள் மறுவரையறைக்கப் படுகிறதோ அதே விகிதத்தில் தமிழ்நாட்டிலும் செயல்படுத்த வேண்டும். தமிழ்நாடு முன்னெடுத்துச் செல்கின்ற தொகுதி மறுவரையறை விழிப்புணர்வு குறித்து தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்கள்தொகை கட்டுபாட்டை வெற்றிகரமாக செயல்படுத்திக் காட்டிய மாநிலங்கள் தண்டிக்கப்படக்கூடாது.

தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் ஆதரவு தெரிவித்த அதிமுக உள்ளிட்ட அனைத்துகட்சிகளுக்கும் இதயப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நியாயமான தொகுதி மறுவரையறையை பெற்றிட தமிழக எம்.பி.க்களுடன் பிரதமரை சந்தித்து வலியுறுத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான தேதி விரைவில் அறிவிக்கப்படும். தற்போது இருக்கும் தொகுதி மறுவரையறை மேலும் 30 ஆண்டுகளுக்கு நீட்டிக்க வேண்டும் எனப் பிரதமர் மோடி நாடாளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும். தமிழ்நாடு போராடும்.. தமிழ்நாடு வெல்லும்... இவ்வாறு அவர் பேசினார்.

## கோவை விமான நிலைய ஓடுபாதையை 12,500 அடி நீளத்துக்கு அதிகரிக்க திட்டம்

**கோவை, மார்ச் 24–**

கோவை விமான நிலையத்தில் இருந்து உள்நாடு, வெளிநாடுகளுக்கு விமானங்கள் இயக்கப்படுகிறது. இங்கு விமான நிலையத்தை விரிவுபடுத்தவும், ஓடுபாதையை நீளப்படுத்தவும் ரூ.1,100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு நிலம் கையகப்படுத்தும் பணி முடிவடைந்தது.

இதைத்தொடர்ந்து விமான நிலைய விரிவாக்கத்துக்கான திட்டங்களை செயல்படுத்த விமான நிலைய ஆணையம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி நிலம் கையகப்படுத்தப்பட்ட பகுதியில் ரூ.29 கோடியில் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டுள்ளது.

இதுகுறித்து விமான நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் கூறியதாவது:

கோவை விமான நிலைய விரிவாக்க பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இதற்கான தற்காலிக மாஸ்டர் பிளான் வெளியிடப்பட்டு உள்ளது. அதில் முதற்கட்டமாக 1லு ஆண்டுகளில் சுற்றுச்சுவர் கட்டுமான பணிகள் முடிவடையும். பயணிகள் முனையம், சரக்கு முனையம், விமான போக்குவரத்து கட்டுப்பாட்டு மையம், தொழில்நுட்ப கட்டிடம் ஆகியவை 2 கட்டங்களாக நிர்மாணிக்கப்பட உள்ளது. ஓடுபாதையின் நீளம் 2,900 மீட்டரில் இருந்து 3,810 மீட்டராக (12,500 அடியாக) அதிகரிப்பது மட்டுமல்லாமல், அங்கிருந்து புறப்படும் விமானங்களின் எண்ணிக்கையும் உயர உள்ளது.

சிறப்பு பஸ் நிலையம், மல்டிலெவல் கார் பார்க்கிங், அணுகுசாலை, ஓட்டல்கள் போன்ற கூடுதல் வசதிகளும் ஏற்படுத்தப்படுகிறது. பயணிகள் வருகை தற்போது ஆண்டுக்கு 3 லட்சத்து 63 ஆயிரமாக உள்ளது. விரிவாக்கத்துக்கு பிறகு ஆண்டுக்கு 15 லட்சம் வரை அதிகரிக்கும். தினசரி இயக்கப்படும் விமானங்களின் எண்ணிக்கையும் 33ல் இருந்து 60 ஆக அதிகரிக்கும். அத்துடன் கோவையின் தொழில் வளர்ச்சிக்கு மேலும் உதவும். இவ்வாறு அவர்கள் கூறினர்.



ஸ்ரீ ராம் மார்கெட்டிங்
தங்க நகை விற்க (அ) மறு அடகு வைக்க
இன்றைய மார்க்கெட் விலைக்கு விற்று தரப்படும்
செல்: 87606 61133, 87606 61199

## நீதிபதி வீட்டில் பணம் கைப்பற்றப்பட்ட விவகாரம் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளி



**புதுடெல்லி, மார்ச் 24–**

பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாவது அமர்வு கடந்த 10ம் தேதி துவங்கியது. வரும் 4 ம் தேதி வரை நடக்க உள்ளது. பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கிய முதல் நாளில் இருந்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இன்று காலை 11 மணிக்கு நாடாளுமன்ற இரு அவைகளும் கூடியது. மக்களவை கூடியதும்டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதி வீட்டில் சாக்கு பையில் பணம் கண்டெடுக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக, எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், கூச்சல், குழப்பம் நிலவியது. சபாநாயகர் ஓம் பிர்லா பலமுறை எச்சரித்தும் எம்பிக்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர். இதனால் அவையை மதியம் 2 மணி வரை ஒத்திவைத்து சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார். அதேபோல் மாநிலங்களவையிலும் அவை கூடியதில் இருந்து எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அமளியில் ஈடுபட்டதால், அவையை மதியம் 2 மணி வரை அவைத்தலைவர் ஒத்திவைத்தார்.

## வங்கதேச கிரிக்கெட் வீரர் தமிம் இக்பாலுக்கு மைதானத்திலேயே நெஞ்சுவலி

**டாக்கா, மார்ச் 24–**

டாக்கா பிரீமியர் லீக் போட்டியில் விளையாடிக் கொண்டிருந்த வங்கதேச கிரிக்கெட் அணியின் முன்னாள் கேப்டன் தமிம் இக்பாலுக்கு மைதானத்திலேயே திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வங்காளதேசத்தில் தற்போது டாக்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இன்று நடைபெற்ற ஆட்டத்தில் முகமதின் ஸ்போர்ட்டிங் கிளப் ஷைன்புகூர் கிரிக்கெட் கிளப் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் ஷைன்புகூர் அணி முதலில் பேட்டிங் செய்தது. முகமதின் அணி பீல்டிங் செய்தது. அந்த அணியின் கேப்டன் தமிம் இக்பாலுக்கு விளையாடிக் கொண்டிருந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து மைதானத்துக்கு விரைந்து வந்த மருத்துவக் குழு அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தனர். விமானம் மூலம் அவரை டாக்காவில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது. ஆனால் அவரது உடல்நிலை மிகவும் மோசமாக இருந்ததால் அந்த முடிவு கைவிடப்பட்டது. இதையடுத்து அவர் பாசிலதுன்னேசா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.



# 2050ல் உலகில் 500 கோடி பேர் சுகாதாரமான தண்ணீர் இன்றி அவதிப்படும் நிலை ஏற்படும்

## ஆய்வை மேற்கோள்காட்டி கலெக்டர் தகவல்



புதுச்சேரி, மார்ச் 24–

புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் உலக தண்ணீர் தினத்தையொட்டி தண்ணீர் தின விழா நேற்று முன்தினம் நடந்தது. ஸ்ரீஅரோபிந்தோ சொசைட்டி வினோத்குமார் வரவேற்றார். புதுச்சேரி நகராட்சி ஆணையர் கந்தசாமி, புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமத்தின் உறுப்பினர் செயலர் ரமேஷ், சுற்றுச்சூழல் பொறியாளர் காளமேகம் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சிறப்பு விருந்தினராக கலெக்டர் குலோத்துங்கன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்ச்சியில் கலெக்டர் குலோத்துங்கன் பேசும்போது, 'மனித குலத்திற்கு தண்ணீர் மிகவும் அவசியம். சுத்தமான, சுகாதாரமான தண்ணீர் கிடைக்கிறதா? என்பது பெரிய கேள்விக்குறி. 5ல் ஒரு குழந்தை சுத்தமான தண்ணீர் கிடைக்காமல் கஷ்டப்படுவதாக ஒரு ஆய்வு சொல்கிறது. 5 கோடி குழந்தைகளுக்கு இப்போது சுகாதாரமான தண்ணீர் இல்லை. இதே நிலை 25 ஆண்டுகளுக்கு தொடர்ந்தால் 2050ல் 500 கோடி பேர் சுத்தமான, சுகாதாரமான தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட போவதாக அறிக்கை கூறுகிறது. எனவே, விழாக்கள் மூலமாக தண்ணீரை சேமிக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம். அரசின் கடமை மட்டுமல்லாமல், தனிநபரின் பங்காக இது இருக்க வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனும் தண்ணீரின் முக்கியத்துவத்தை உணர வேண்டும். தண்ணீரை வீணாக்காமல் பாதுகாக்க வேண்டும்'. இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில், ஈர நிலங்கள் பாதுகாப்பு முயற்சியில் ஈடுபட்ட, பாகூர் பங்காரு வாய்க்கால் நீராதார கூட்டமைப்பு தலைவர் சந்திரசேகருக்கு, 'ஈர நில சாம்பியன்' பட்டம் வழங்கப்பட்டது. முன்னதாக, ஆயிகுளம் என்ற கருப்பொருள் தெரு நாடகம் நடந்தது. மேலும், தெரு நாடக கலைஞர்கள் தயாரிப்பாளர்கள், ஆகாய தாமரை பயிற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். கீதா நன்றி கூறினார்.

# மாநில திமுக சார்பில் இப்தார் நோன்பு திறப்பு



புதுச்சேரி, மார்ச் 24–

புதுச்சேரி மாநில திமுக சார்பில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில் நடைபெற்ற இஃப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்றனர்.

புதுச்சேரி மாநில தி.மு.க. சார்பில், ஆண்டுதோறும் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடத்துவது வழக்கம். அதன்படி, நேற்று மாலை வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான்பேட்டை முஹம்மதியா மஹாலில் இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

சுல்தான்பேட்டை அல்மதினா பள்ளிவாசல் இமாம் முகமது மூசா அவர்கள் சிறப்பு பிரார்த்தனை செய்ய ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்து நோன்பு திறந்தனர்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில் நடைபெற்ற இஃப்தார் விருந்து நிகழ்ச்சியில் முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், வைத்தியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா. சரவணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், விடுதலை சிறுத்தைகள் கட்சி முதன்மை செயலாளர் தேவபொழிலன், தொகுதி செயலாளர் பழநி, மதிமுக கபிரியேல், மனித நேய மக்கள் கட்சி சகாபுதீன், சிபிஐ அந்தோணி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் சண். குமரவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், இராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், தொகுதி செயலாளர்கள் மணிகண்டன், சக்திவேல், வடிவேல், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு. மோகன்தாசு, வர்த்தகர் அணி ரமணன், தொமுச அங்காளன், அவைத்தலைவர் ஜலால் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி தலைவர்கள், பள்ளிவாசல்களின் முத்தவல்லிகள் கலந்துகொண்டனர்.

# அரசின் சாதனைகள் புகைப்படக் கண்காட்சி



மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் ஊராட்சி ஒன்றியம், வலையபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்படக் கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் கண்டுகளித்து மகிழ்ந்தனர்.

# கல்வி அறிவும், அதற்கு தேவையான வேலைவாய்ப்பினை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது: பேரவைத் தலைவர் அப்பாவு பேச்சு



நெல்லை, மார்ச் 24–

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, தூய யோவான் கல்லூரிகளில் மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் சார்பில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அப்பாவு, மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வஹாப், மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜூ ஆகியோர் முன்னிலையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இம்முகாமில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவைத் தலைவர் அப்பாவு பேசியதாவது: தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையின் கீழ் செயல்பட்டு வரும் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்றுத் துறையினரால் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த மே 2021 முதல் 3 கலைஞர் நூற்றாண்டு விழா சிறப்பு வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் டாடா சோலார் பவர் நிறுவனத்திற்கென பிரத்தியேகமான வேலைவாய்ப்பு முகாம் உட்பட ஒன்பது மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இம்முகாம்களில் இதுவரை 945 வேலை அளிக்கும் நிறுவனங்கள் கலந்துகொண்டு 6316 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய பத்தாவது வேலை வாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு வேலை நாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். வேலைவாய்ப்பு முகாமில் 116 வேலை அளிக்கும் நிறுவனங்கள் பல்வேறு பிரிவுகளில் வேலை நாடுனர்களை தேர்வு செய்ய இம்முகாமிற்கு வருகை புரிந்துள்ளனர். நடைபெற்ற முகாமில் 466 நபர்கள் பணிநியமன ஆணைகள் பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் பட்டப்படிப்பு படிப்பதை ஊக்குவிக்கும் வகையில் புதுமை பெண் திட்டம். தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்பட்டு வருவதோடு, என்ன படிப்பு படிக்காலம் என்பதைவிட என்ன படித்தால் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மேல்நிலை இரண்டாம் ஆண்டு படித்து முடித்தவுடன் நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு கற்றுத்தரப்படுகிறது.

தமிழ்நாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் 17 லட்சம் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்கப்பட்டுள்ளது. 32 தொழிற்பூங்காக்கள் 28 தொழிற்பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளது. தொழில் வளத்தை பெருக்குவதன் மூலம் அதிகளவிலான வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதால், தமிழ்நாட்டில் என்ன படித்தாலும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையை தமிழ்நாடு அரசு உருவாக்கியுள்ளது. மேலும் அரசு பணிக்கு செல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு பயிலும் மாணவர்களுக்கு பிரத்தியேகமாக தியேகமாக மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலம் சிறப்பு பயிற்சி வகுப்புகள் எடுக்கப்பட்டு, பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான மாதிரி தேர்வு நடத்தி கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் 243 மாணவர்கள் இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்டு, போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற்று பல்வேறு அரசுத்துறைகளில் பணியாளராக பணிபுரிந்து வருகிறார்கள். ஒவ்வொரு மாணவர்களும் தங்களது கல்வி கனவை நிறைவேற்றும் வகையில் கல்வி அறிவும், அதற்கு தேவையான வேலைவாய்ப்பினையும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது என பேசினார்.

இம்முகாமில், மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்ததாவது: ஒவ்வொரு மாதம் கடைசி வெள்ளிக்கிழமைகளில் சிறிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல் மையத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவரை 43 முகாம்கள் நடத்தப்பட்டு, அதன்மூலம் 980 வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு இரண்டு முறை வீதம் 9 மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது.

இன்றைய வேலைவாய்ப்பு பெறும் அனைவரும் இந்த வேலைவாய்ப்புடன் நின்றுவிடாமல் நவீன தொழில்நுட்பத்திற்கேற்ப தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஏஐ ஜெனரேட்டிவ் தொழில்நுட்ப காலத்தில் இனி பயணிக்க இருக்கிறோம் என்பதை மறந்துவிட வேண்டாம். ஏஐ தொழில்நுட்பத்தின் மூலம் ஏற்படும் வேலைவாய்ப்பு மாற்றங்கள் குறித்து அறிந்து கொண்டு உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். நவீன தொழில்நுட்பத்துடன் 4.0 என்ற தகவல் தொழில்நுட்பத்தினை தெரிந்து கொண்டு இனிவரும் காலங்களில் அதற்கு தகுந்தாற்போல் உங்களின் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், கிறிஸ்தவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியாளர்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியத் தலைவர் விஜிலா சத்தியானந்த், மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) (பொ) சண்முகசுந்தர், கல்லூரி செயலர் ஜெயசந்திரன், கல்லூரி துணை முதல்வர் பர்னபாஸ் ஜேக்கப், உதவி இயக்குநர்கள் (வேலைவாய்ப்பு) மரிய சகாய அந்தோணி, ஹரிபாஸ்கர், மாவட்ட திறன் பயிற்சி அலுவலர் பிராங்கிளின், களக்காடு நகர்மன்ற துணைத் தலைவர் பி.சி.ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் கனகராஜ், முக்கிய பிரமுகர் ஜோசப் பெல்சி, சித்திக் உட்பட அரசு அலுவலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், வேலைநாடுநர்கள் பலர் கலந்துகொண்டார்கள்.

# கால்வாய் புனரமைக்கும் பணியை துவக்கி வைத்த அமைச்சர் சாமிநாதன்




தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சின்னக்காம்பாளையம் பேரூராட்சி, தேவநல்லூரில் அமராவதி பிரதானக் கால்வாய் புனரமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார்கள்.

# உள்நோயாளிகளிடம் ஆட்சியர் கலந்துரையாடல்



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா பூதப்பாண்டி அரசு தாலுகா தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகளை நேரில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

# சமய நல்லிணக்க இஃப்தார் விழா





திண்டுக்கல் மேற்கு மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி, தொப்பம்பட்டி ஒன்றியம், கீரனூர் பேரூர் கழகம் ஏற்று நடத்தும் மாபெரும் சமய நல்லிணக்க இஃப்தார் விழா தமிழக வெற்றிக்கழக மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜா தலைமையில் நடந்தது. ஒட்டன்சத்திரம் நகரச் செயலாளர் அருண், தொப்பம்பட்டி ஒன்றிய செயலாளர் முகமது ஜின்னா முன்னிலையில் மாவட்ட துணைச் செயலாளர் கீரனூர் பேரூர் கழக செயலாளர், மாவட்ட செயற்குழு உறுப்பினர் முகமது நூர் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்களும் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை செயற்குழு உறுப்பினர் ஷாஜகான், ஜபருல்லா, அஜார் மேற்கொண்டனர்.

# செஞ்சியில் சமுதாய வளைகாப்பு விழா மஸ்தான் எம்எல்ஏ பங்கேற்பு



செஞ்சி, மார்ச் 24–

விழுப்புரம் மாவட்டம் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணிகள்சார்பில் செஞ்சி மற்றும் மேல்மலையனூர் வட்டாரங்களைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா செஞ்சியில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணிநெடுஞ் செழியன் முன்னிலை வகித்தார். செஞ்சி வட்டார குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் டயானா அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு செஞ்சி, மேல்மலை யனூர் ஒன்றியங்களைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட கர்ப்பிணிகளுக்கு சீர் வரிசை பொருட்களை வழங்கி வளைகாப்பு நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ, தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் ஏழை எளிய மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடையும் வகையில் என்னற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் குறிப்பாக பெண்கள் நலன் சார்ந்த பல்வேறு சிறப்பு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார். மகளிர் விடியல் பயணம், மகளிர் சுய உதவி குழுவினருக்கு கடன் உதவிகள், மகளிர் உரிமைத் தொகை, உயர்கல்வி படிக்கும் கல்லூரி மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தில் மாதம் ஆயிரம் ரூபாய் உள்ளிட்ட என்னற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு தமிழில் பெயர் சூட்ட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணிவேந்தன், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் முருகன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, செல்வி ராம சரவணன், செஞ்சிவட்டார மருத்துவ அலுவலர்கள் டாக்டர் யோக பிரியா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வட்டார வளர்ச்சி மேற்பரையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேல்மலையனூர் வட்டார குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் கவிதா நன்றி கூறினார்.

# செஞ்சியில் இல்லற தர்மம் வெள்ளி விழா மாநாடு



செஞ்சி, மார்ச் 24–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தனியார் திருமண மண்டபத்தில் தர்ம ரக்ஷண ஸமிதி நடத்தும் இல்லற தர்மம் வெள்ளி விழா மாநாடு நடைபெற்றது. இந்த நிகழ்வில் தினந்தோறும் கடைபிடிக்க கூடிய நித்ய பூஜை, பித்ரு பூஜை, தானம், தியானம், சொற்பொழிவு மற்றும் செயல்முறை விளக்கம் யக்ஞ, தான், தப, கர்ம, நத் தியானம் ஸ்ரீ கிருஷ்ணா பகவான் பகவத் கீதையில் அருளியது பற்றியும் சொற்கள் நடைபெற்றது. நிகழ்ச்சியில் தர்ம ரக்ஷண ஸமிதியின் மாநில பொது செயலாளர் கணபதி, மாநில செயலாளர் ஹரிஹரன், பெருமண்டல அமைப்பாளர் கள் ராஜ்குமார், அழகுவேல், மாநில பயிற்சி இணை அமைப்பாளர் ஜீவன்ராம், மாவட்டத் தலைவர் குமார் உட்பட மண்டல, மாவட்ட, ஒன்றிய பஞ்சாயத்து பொறுப்பாளர்கள் மற்றும் செஞ்சி அதனை சுற்றியுள்ள ஆன்மீக அன்பர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# முத்தூர் தடுப்பணையை புனரமைக்க அமைச்சர் சாமிநாதன் ஆய்வு



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதன் திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சி, சின்னமுத்தூரில் மலையாத்தாள் ஓடை முத்தூர் தடுப்பணை புனரமைக்கும் பணி மேற்கொள்வது தொடர்பாக பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# செஞ்சியில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



செஞ்சி, மார்ச் 24–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் செஞ்சி நகரசெயலாளர் நசுருதீன், தலைமை தாங்கினார். செஞ்சி ஒன்றிய செயலாளர்கள் தமிழரசன், பாண்டியன், சாந்த சீலன், மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர்கள் முருகன், திருமலை , ரகுபதி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். மத்திய ஒன்றியம் இளைஞரணி அமைப்பாளர் ஆல்பர்ட் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக விழுப்புரம் வடமேற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் குண.சரவணன், நோன்பு திறக்கும் நிகழ்ச்சியில் பதிவேற்று சிறப்புரையாற்றினார். இதில் செஞ்சி பகுதியை சேர்ந்த ஏராளமான இஸ்லாமிய பெருமக்களுடன் பல்வேறு மதத்தைச் சேர்ந்த நோன்பு கஞ்சி சாப்பிட்டனர். பின்னர் அனைவருக்கும் தமிழக வெற்றி கழகம் சார்பில் அறுசுவை பிரியாணி வழங்கப்பட்டது.

# இலவச கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முகாம்




காரைக்கால் விநாயகா மிஷன்ஸ் மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, ஜெம் மருத்துவமனையுடன் இணைந்து, ஜிப்மர் டாக்டர் எம் மேக்னஸ் ஜெயராஜ், டாக்டர் ராஜேஷ் கண்ணன் செல்வம் ஆகியோர் தலைமையில், காரைக்காலில் மாபெரும் இலவச கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை முகாமை சிறப்பாக நடத்தியது. முகாமில் ஏராளமான பயனாளிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். நிகழ்ச்சியில் காரைக்கால் விநாயகா மிஷன் மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் சி.குணசேகரன், அறுவை சிகிச்சை தலைவர் ஆர் பாரதிதாசன் ஒருங்கிணைப்பாளர் சௌரிராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மத்திய அரசை கண்டித்து ரயில் மறியல்

கோவை, மார்ச் 24–

மத்திய அரசால் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்ட விவசாய தலைவர்கள் மற்றும் விவசாயிகளை உடனடியாக விடுதலை செய்ய கோரியும், மத்திய அரசை கண்டித்தும் கோவை ரயில் நிலையம் முன்பு கேஎம்எம் தமிழக விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பு கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கம், ஏர்முனை இளைஞர் அணி, தமிழ்நாடு விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு, உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடு, தமிழக விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு விவசாய அமைப்புகள் ரயில்




மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். நடைபெற்ற ரயில் மறியல் போராட்டத்திற்கு ஆதரவாக உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் ஆர்.வேலுசாமி மற்றும் மாநில பொருளாளர் ராஜேஷ் உள்ளிட்ட பல்வேறு விவசாய அமைப்புகளின் தலைவர்கள், நிர்வாகிகள், விவசாயிகள் ரயில் மறியலில் ஈடுபட முயன்றபோது காவல்துறையினர் கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்தனர். ஆர்ப்பாட்டத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பினார்கள்.

மேலும் விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட ஆரம்பித்தது போல் இந்திய மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மத்திய அரசை வெளியேற்றும் காலம் வரும் என்று பேசினார்கள்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• திங்கள் • மார்ச் 24, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# மாதிரி செந்தொண்டர் பேரணி




இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) 24வது அகில இந்திய மாநாட்டை முன்னிட்டு திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் மாதிரி செந்தொண்டர் பேரணி நடைபெற்றது. இதில் மாநில செயற்குழு உறுப்பினர் மதுக்கூர் ராமலிங்கம், திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், மாவட்டச் செயலாளர் கே.பிரபாகரன், மாநிலக்குழு உறுப்பினர் ஜி.ராணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# திண்டுக்கல்லில் ரத்ததான முகாம்





திண்டுக்கல் மருத்துவக் கல்லூரியில் ரத்ததான முகாமை திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் தொடங்கி வைத்தார். அருகில் மாவட்ட செயலாளர் பிரபாகரன்.

# ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாள் விழா



கதிர்காமம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநில இளைஞர் அணி தலைவருமான ரமேஷ் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், மகளிற்கு புடவை மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் நிர்வாகிகள், மகளிர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

# டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி சாம்பியன்



புதுச்சேரி, மார்ச் 24–

இந்திய அரசின் விளையாட்டுத் துறையில் அங்கீகாரம் பெற்ற டென்னிஸ் பால் கிரிக்கெட் தெற்கு ஆசிய சாம்பியன் ஷிப் போட்டி ஆண்கள், பெண்களுக்கு தனித்தனியாக நேபாளத்தில் நடந்தது.

இதில் இந்திய அணியில் புதுச்சேரி டென்னிஸ் பால் கிரிக்கெட் அசோசியேஷன் ஆப் பாண்டிச்சேரி சார்பாக ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்துகொண்டனர். இந்த போட்டியில் இந்திய அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

இந்நிலையில் டென்னிஸ் பால் கிரிக்கெட் போட்டியில் சாம்பியன் ஷிப்பட்டம், தங்க பதக்கம் வென்று திரும்பிய மதன் கோபால் வீரர்களுக்கு கனவுகள் மெய்ப்படும் அறக்கட்டளை நிறுவனத் தலைவர் முருகன் (எ) பெருமாள் வாழ்த்தினார். உடன் அறக்கட்டளையின் செயலாளர் பாரதிராஜா மற்றும் பொருளாளர் சுகாசினி மற்றும் அறக் கட்டளையின் நிர்வாகியை கலந்துகொண்டனர்.

# வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம்





ஈரோடு, மார்ச் 24–

ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் முத்துசாமி தலைமையில், ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்து அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் நடைபெற்றது. கூட்டம்

தமிழ்நாடு முதலமைச்சர் ஆலோசனைபடி, ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்தும், இப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் துரிதப்படுத்துவது குறித்தும், புதிய திட்டப்பணிகளை தொடங்குவது குறித்தும், தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் 2025–26 நிதிநிலை அறிக்கையில் ஈரோடு மாவட்டத்திற்கு 6ஜி60ஜி தனியாகவும், பொதுவாகவும் பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகளின் மீது மேற்கொள்ள வேண்டிய அடிப்படை பணிகள் குறித்து நடைபெற்ற இக்கூட்டத்தில் துறை வாரியாக ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் பெறப்படும் கருத்துகள் தமிழ்நாடு முதலமைச்சர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் கடந்த டிசம்பர் மாதம் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்தபோது, மாவட்டத்திற்கான முத்திரைத் திட்டங்கள் ஆய்வு செய்ததைத் தொடர்ந்து, அப்பணிகளின் முன்னேற்றம் குறித்து துறை வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலைகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில், சோலார் பேருந்து நிலைய பணிகள், ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை மற்றும் கீழ்பவானி நீர்பாசனத் திட்டங்களின் பேரில் திட்ட நிபந்தனைப் பட்டா பெற்றவர்களுக்கு தற்போது திட்ட நிபந்தனையை தளர்வு செய்து அயன் பட்டா வழங்குவதற்கான கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பெருந்துறையில் நொய்யல் ஆற்றின் வடக்கு கரையில் கொடுமணல் அகழ்வாய்வில் கண்டெடுத்த பொருட்களை காட்சி படுத்திட ஈரோடு மாவட்டத்தில் தொல்லியல் துறையின் மூலம் அருங்காட்சியம் அமைத்தல், ஜவுளி பூங்கா அமைத்தல், ஈரோடு மற்றும் கரூர் பகுதியில் உள்ள சங்கங்களின் பயன்பாட்டிற்கு மெல்லிய மெத்தைகள் தைக்கும் இயந்திரம் நிறுவுதல், தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைத்தல், ஈரோடு மாநகராட்சி மக்களுடைய வசதிக்காக மாபெரும் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம், மஞ்சள் ஏற்றுமதி மையம் தரம் உயர்த்துதல், மஞ்சள்தூள் உற்பத்தி செய்யும் குறுங்குழுமத்திற்கான ஒரு பொது வசதி மையம், கைத்தறி பூங்கா நிறுவுதல், அரசு மருத்துவமனையில் புதிய ஒருங்கிணைந்த ஆய்வகம், பண்ணாரி அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் கோயிலில் 9 நிலை ராஜ கோபுரம், சென்னிமலையில் சுதந்திரப் போராட்ட தியாகி கொடிகாத்த குமரன் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைத்தல், கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் அமைத்தல், சோலார் பகுதியில் காய்கறி மளிகை சந்தை வளாகம் அமைத்தல், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் பயன்பெறும் வகையில் கூடம், உள் விளையாட்டுக் கூடம், கற்றல் மற்றும் பயிற்சி மையம் போன்ற வசதி கொண்ட சமூக கூடங்கள் அமைத்தல், பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சைப் பிரிவு கட்டுதல், ஈரோடு அரசு பொறியியல் கல்லூரியில் கூடுதல் ஆண்கள் விடுதி கட்டடம், சம்பத் நகர் திட்டப் பகுதியில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் வணிக வளாகம் மற்றும் நவீன வசதிகள் கொண்டு அடுக்குமாடி குடியிருப்புகள், காளிங்கராயன் அணைக்கட்டு புனரமைப்பு பணி, பால்வளத் தந்தை பரமசிவன் திருவுருவச் சிலை அமைத்தல் உள்ளிட்ட பணிகளின் முன்னேற்றம் மற்றும் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து தொடர்புடைய துறை அலுவலர்கள் விரிவாக எடுத்துரைத்தனர்.

தொடர்ந்து, 2025–26 நிதிநிலை அறிக்கையில் ஈரோடு மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்ட கொடுமணல் அகழாய்வுகளை காட்சிப்படுத்த ஈரோடு மாவட்டத்தில் நொய்யல் அருங்காட்சியகம், காவேரி நதிக்கரை மேம்பாட்டுப் பணிகள், 214 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம், தோழி பணிபுரியும் மகளிர் விடுதி, மூத்த குடிமக்களின் முழுமையான பராமரிப்பிற்கென அன்புச்சோலை மையங்கள், சத்தியமங்கலம் மற்றும் தாளவாடி தொலைதூர மலைப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளை தரம் உயர்த்துதல், பழங்குடியினரின் மரபுசார் அறிவுகளை பாதுகாத்து பல்லுயிர்ப் பெருக்கத்தோடு கூடிய பழங்குடியினர் வாழ்வாதாரக் கொள்கை, பால்பண்ணை இயந்திரங்கள் நவீன மயமாக்கல், மாநில அளவிலான வெப்ப அலை செயல் திட்டங்கள், மேலும் பொது அறிவிப்புகளான ஆட்சேபணைற்ற புறம்போக்கு நிலங்களில் 5 ஆண்டுகளுக்கு மேல் வசிக்கும் மக்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல், கலைஞரின் கனவு இல்லம் திட்டம், முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், இடைநிலை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்குத் தேவையான நவீன மருத்துவக் கருவிகள் (ம) மனித வளம், கருப்பை வாய் புற்றுநோய் தடுக்கவும், அகற்றிடவும் தடுப்பூசி வழங்குதல், சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் வங்கி கடன், நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் புதுப்பித்தல், நீர்நிலைகளை புனரமைத்தல், கால்நடைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யும் கட்டமைப்புகள், விசைத்தறிகள் நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவை குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு தமிழ்நாட்டிற்கு எண்ணற்ற திட்டங்களை வழங்கி வருகிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைகளில் பல புதிய திட்டங்கள் அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து துறைகளிலும் அறிவித்துள்ளார்கள். இத்திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களிடத்திலே மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. இந்த அறிவிப்புகள் மட்டுமல்லாமல், ஏற்கனவே வழங்கப்பட்ட பணிகளில் முடிக்கப்பட்ட பணிகள், நடைபெற்று வரும் பணிகள் ஆகியவற்றினை ஆய்வு செய்து, அறிக்கையினை வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் உத்தவிட்டுள்ளார்கள். மேலும் 2025–26 நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்ட திட்டங்களை அமல்படுத்திட அந்தந்த மாவட்டத்தில் உள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் துறைச் சார்ந்த அலுவலர்கள் மேற்கொள்ளவற்கு நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் இப்பணிகளை உடனடியாக துவங்குவதற்கும், துரிதப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்கள்.

அதனடிப்படையில் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்படும் திட்டங்களை காலதாமதமின்றி, அதற்கான பணிகளை விரைவாக துவக்குவதற்கும், முடிப்பதற்கும் நடவடிக்கை எடுத்திட தெரிவித்துள்ளார்கள்.

எனவே அரசால் அறிவிக்கப்படும் திட்டங்கள் அனைத்தையும் விரைவாக செயல்படுத்த ஈரோடு மாவட்டம் சார்பில் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டங்களை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பின் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் சந்திரகுமார் (ஈரோடு கிழக்கு), வெங்கடாசலம் (அந்தியூர்), ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அர்பித் ஜெயின், கோபிசெட்டிபாளையம் சார் ஆட்சியர் சிவானந்தம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, துணை ஆட்சியர் (பயிற்சி) சிவபிரகாசம் உட்பட அனைத்துத்துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# சாதனையாளர்கள் சங்கமம் நிகழ்ச்சி





சேலம், மார்ச் 24–

சேலம் மாவட்ட முத்தமிழ் சங்கம் சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு 100 சாதனையாளர்களின் 100 சரித்திரம் மலர் வெளியீடு சுழலரங்கம், கவியரங்கம், வாழ்த்தரங்கம், சாதனையாளர்கள் சங்கமம் நிகழ்ச்சி சேலம் தமிழ் சங்கம் அண்ணா நூலகம் முதல் தளத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு சேலம் மாவட்ட முத்தமிழ் சங்கத் தலைவர் பொன் சந்திரன் தலைமை தாங்கி நடத்தினார்.

செயலாளர் கோவிந்தராஜ் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார். இதில் துணைத் தலைவர்கள் ஓ டெக்ஸ் இளங்கோவன், அன்பு வழி அசோகன், கம்பன் கழகம் செயலாளர் ராமன், யாவரும் கேளிர் தமிழ் மன்றம் தலைவர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மில்க் வொண்டர் கேக் நிர்வாக இயக்குனர் ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தமிழரசு ஆகியோர் கலந்துகொண்டு மலரை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்கள். மேலும் வள்ளி நாராயணன், எழில் சோம பொன்னுசாமி, ரத்தினம், தாமோதரன், கோவை சுந்தரம், ஆர்வி பாபு, சேலம் சிட்டிபாபு ஆகியோர் மலரைப் பெற்றுக் கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். இந்நிகழ்வில் சேலம் மாவட்ட முத்தமிழ் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# மணவெளி தொகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர வாகனம்–சபாநாயகர் செல்வம் வழங்கினார்

புதுச்சேரி, மார்ச் 24–

புதுவை அரசு சமூக நலத்துறை மூலம் மணவெளி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு அரசின் விலையில்லா 3 சக்கர மோட்டார் சைக்கிள் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

விழாவுக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், சபாநாயகருமான செல்வம் தலைமை வகித்தார். அவரின் பரிந்துரையின் பேரில் 8 மாற்றுத்திறனாளி பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கு 3 சக்கர மோட்டார் வாகனங்களை சபாநாயகர் செல்வம் வழங்கினார். நிகழ்ச்சியில் சமூக நலத்துறை இயக்குநர் ராகினி, துணை இயக்குநர் ஆறுமுகம், பாஜக மாநில விவசாய அணி பொதுச் செயலாளர் சக்திபாலன், மாவட்ட தலைவர் சுகுமாரன், தொகுதி தலைவர் லட்சுமி காந்தன், கிருஷ்ணமூர்த்தி ரெட்டியார், ஞானசேகரன், சக்திவேல், மாவட்ட துணைத் தலைவர் மணிகண்டன், பூரணாங்குப்பம் மணி, கணபதி உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# ஓசூர் தேர்த்திருவிழாவில் பிளாஸ்டிக் எதிர்ப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை முன்னெடுக்கும் டாடா எலக்ட்ரானிக்ஸ்



சேலம், மார்ச் 24–

டாடா எலக்ட்ரானிக்ஸ், அதன் சமூக ஈடுபாடு முன்முயற்சிகளின் ஒரு பகுதியாக, ஒரு முறை பயன் படுத்தும் பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைப்பதற்கான கழிவு மேலாண்மை பிரச்சாரத்தை சமீபத்தில் ஏற்பாடு செய்தது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, ஓசூர் மலை கோவிலில் (மலை கோவில்) நடைபெற்ற வருடாந்திர தேர் திருவிழாவில் விற்பனை யாளர் களுக்கு 45,000க்கும் மேற்பட்ட மக்கும் செய்தித்தாள் பைகளை வெற்றிகரமாக இந்த நிறுவனம் விநியோகித்தது.

மார்ச் மாதத்தில் பாரம்பரியமாக கொண்டாடப்படும் இந்த தேர்த்திருவிழாவில் சுற்றுவட்டார கிராமங்கள் மற்றும் நகரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்கிறார்கள். நூற்றுக்கணக்கான விற்பனை யாளர்கள் தங்களது கடைகளை அமைத்து, பொதுவாக ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பைகளைப் பொதியிடுவதற்காக பயன்படுத்துகின்றனர். இந்த சுற்றுச்சூழல் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக, டாடா எலெக்ட்ரானிக்ஸ் அதன் ‘ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக்கை எதிர்ப்போம்’ என்ற விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கி, 2,000க்கும் மேற்பட்ட பணியாளர்களால் தயாரிக்கப்பட்ட மறுசுழற்சி செய்யப்பட்ட செய்தித் தாள்களால் உருவாக்கப்பட்ட சுற்றுச்சூழல் நட்பு மாற்று பைகளை விற்பனையாளர்களுக்கு வழங்கியது.இந்த முயற்சியின் தொடர்ச்சியான மூன்றாம் ஆண்டைக் குறிக்கின்ற வகையில் டாடா எலக்ட் ரானிக்ஸ் நிறுவனத் திலிருந்து 30க்கும் மேற்பட்ட பணியாளர் தன்னார்வலர்கள் இந்த பைகள் விநியோக நடவடிக் கையில் பங்கேற்றனர். நவம்பர் 2024 முதல், கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் 1,000 விற்பனையாளர்களிடம் 66,000க்கும் மேற்பட்ட செய்தித்தாள் பைகள் விநியோகிக்கப்பட்டதை இந்த பிரச்சாரம் கண்டது. இந்த தொடர்ச்சியான முயற்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிலையான முயற்சிகளை ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல், உள்ளூர் மக்களை பிளாஸ்டிக் கழிவுகளை குறைக்க ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுச்சூழலில் ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்த முன்முயற்சி, நிலையான தன்மையை ஊக்குவிப்பதற்கும் மற்றும் சுழற்சி கழிவு பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாளர்களாக அது சேவை செய்யும் சமூகங்களை மேம்படுத்துவதற்கும் நிறுவனத்தின் தொலைநோக்கை வலுப்படுத்து கின்ற வகையில், ஓசூருக்கான டாடா எலக்ட் ரானிக்ஸ் நிறுவனத் தின் நீண்ட கால அர்ப்பணிப்பை முக்கியப்படுத்துகிறது.

# ஆலங்குளத்தில் புகையிலை பொருட்கள் கடத்திய 4 பேர் கைது

## 16 மூட்டை குட்கா பறிமுதல்



தென்காசி, மார்ச் 24–

தென்காசி மாவட்டம் ஆலங்குளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில், புகையிலை மற்றும் போதைப் பொருள் ஒழிப்பு சம்பந்தமாக, தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், ஆலங்குளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் கிளாஸ்டன் ஜோஸ் ஆகியோர்களின் உத்தரவின்படி, ஆலங்குளம் காவல் ஆய்வாளர் காசிப்பாண்டியன், ஆலங்குளம் காவல் உதவி ஆய்வாளர் சத்தியவேந்தன், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆறுமுகம், மு.நி.காவலர் ராமச்சந்திரன், ராஜேஷ், ஆலங்குளம் உட்கோட்ட குற்றப்பிரிவு தலைமைக் காவலர்கள் பாலமுருகன், மோகன்ராஜ், குமரேசசீனிவாசன், குருநாதகுரு, முதல் நிலைக் காவலர்கள் லிங்கராஜா, மகேஷ், காவலர் அயன்ராஜ் மற்றும் சைபர் க்ரைம் காவலர்கள் சௌந்திரபாண்டியன், ஜேசுமரிய அந்தோணி ஆகியோரின் தீவிர விசாரணை நடத்தினர்.

அதில் அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்து கடத்தி வரப்படும் புகையிலை மற்றும் குட்கா பொருட்களை கடத்திச் செல்லும் குற்றவாளிகளை கண்டறிந்து அவர்களிடமிருந்து 16 மூட்டைகள் புகையிலை மற்றும் குட்கா பொருட்களையும் கடத்திச் செல்வதற்கு பயன்படுத்திய வாகனங்களான இரண்டு மினி தோஸ்த் மற்றும் பிக்கப் வாகனங்கள், இரண்டு இருசக்கர வாகனங்களையும் கைப்பற்றினர்.

மேலும் அதனை கடத்திய குற்றவாளிகளான கீழப்பாவூர் பொன்னன்நாடார் தெருவை சேர்ந்த பூமாடன் மகன்களான முருகன், செல்வம் என்ற தல செல்வம், குறும்பலாபேரி காமராஜர் தெருவை சேர்ந்த குத்தாலிங்கம் மகன் ரத்தினசாமி என்ற மகேஷ் மற்றும் அயன் குறும்பலாபேரியை சேர்ந்த இசக்கிமுத்து மகன் நவீன்குமார் என்ற எலி ஆகிய நான்கு பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

# லஞ்சம் வாங்கியதாக புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் உள்பட 3 பேர் கைது



காரைக்கால், மார்ச் 24–

காரைக்காலில் தனியார் கட்டுமான நிறுவனத்திடம், லஞ்சம் வாங்கியதாக கூறி புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் உள்ளிட்ட 3 பேரை சிபிஐ லஞ்ச ஒழிப்பு பிரிவு 22 மணி நேரத்துக்கு மேலாக விசாரணை நடத்தி கைது செய்தனர்.காரைக்காலில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த தனியார் நிறுவனம் கட்டுமான பணிகளை மேற்கொண்டு வருகிறது. இப்பணியில் ஈடுபட்டுள்ள தனியார் கட்டுமான நிறுவனத்திடம் புதுச்சேரியை சேர்ந்த பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் உள்ளிட்ட பல்வேறு பொதுப்பணித்துறை அதிகாரிகள் லஞ்சம் வாங்கியதாக கூறப்படுகிறது. அதில் ஒருவர் பொதுப்பணித்துறை அதிகாரிகளை மாட்டி விட முடிவு செய்து சென்னையில் உள்ள சிபிஐ லஞ்ச ஒழிப்புத்துறை இடம் அவர்கள் புகார் செய்ததாக கூறப்படுகிறது. அதன் ஒரு பகுதியாக லஞ்சம் பெறும் அதிகாரிகளை கையும் களவுமாக பிடிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் காரைக்கால் வந்தனர். அதேசமயம், புதுச்சேரி மாநில பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன் காரைக்கால் மாவட்டத்திற்கு நேற்று வருகை தந்தார். அப்பொழுது பல்வேறு அரசு பணிகளை ஆய்வு செய்த பின், கடற்கரை சாலையில் உள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான தங்கு விடுதியில் ஓய்வு எடுத்தார். அப்பொழுது லஞ்சத் தொகையை பிரிப்பது தொடர்பாக காரைக்கால் மாவட்ட பொதுப்பணித்துறை சேர்ந்த அதிகாரிகள் அந்த அறையில் கூடியதாக கூறப்படுகிறது.

அப்பொழுது நேற்று முன்தினம் பிற்பகல், திடீரென்று சி.பி.ஐ லஞ்ச ஒழிப்பு மற்றும் குற்ற தடுப்பு பிரிவு அதிகாரிகள் எட்டுக்கு மேற்பட்ட நபர்கள், தங்கும் விடுதிக்குச் சென்று புதுச்சேரி மாநில பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன் மற்றும் சில பொதுப்பணித்துறை அதிகாரிகளை மடக்கிப்பிடித்து நேற்று பிற்பகல் முதல் நேற்று மதியம் என சுமார் 22 மணி நேரத்திற்கு மேலாக லஞ்சம் வாங்கியதாக வந்த புகார் குறித்து விசாரணை செய்து வந்தனர். மேலும், இதேபோல புதுச்சேரியில் உள்ள புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன் வீடு, காரைக்கால் பகுதியை சேர்ந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் வீடுகள் மற்றும் அவர்களுக்கு சொந்தமான இடங்களில் பல மணி நேரமாக அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தி முக்கிய ஆவணங்களை கைப்பற்றி உள்ளதாக தகவல் வெளியாகியது.

தொடர்ந்து, புதுச்சேரி மாநில பொதுப் பணித்துறை தலைமை பொறியாளர் தீனதயாளன், காரைக்கால் மாவட்ட பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சிதம்பரநாதன் மற்றும் ஒப்பந்ததாரர் இளமுருகு என 3 பேரை கைது செய்து அவர்களிடமிருந்து பல்வேறு ஆவணங் களை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். பின்னர் கைது செய்யப்பட்ட மூன்று நபர்களையும் காரைக்கால் மாவட்ட ஒருங்கிணைந்த கோர்ட்டில் நேற்று மாலை ஆஜர் படுத்தினர். இச்சம்பவம் புதுச்சேரி மற்றும் காரைக்காலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# ஆலங்குடி ஆயில் மில் குடோனில் தீ விபத்து



புதுக்கோட்டை, மார்ச் 24–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி பள்ளிவாசல் தெருவில் சாகுல், 40, என்பவருக்கு சொந்தமான ஆயில் மில் உள்ளது. இந்த ஆயில் மில் மேல் தளத்தில் நல்லெண்ணெய் கடலை எண்ணெய் தேங்காய் எண்ணெய் மற்றும் அட்டைப் பெட்டிகள், எள் மூட்டைகள், கடலை பருப்பு மூட்டைகள் உள்ளிட்ட ஆயில் தயாரிப்புக்கு தேவையான பொருட்களை வைத்துள்ளார்.

இதில், இன்று அதிகாலை சுமார் ஒரு மணி அளவில் எதிர்பார விதமாக தீ பற்றி உள்ளது. இந்த தீயானது மலமல வென தீ பிடித்து ஆயில் மில் மேல் தளத்தில் உள்ள குடோன் முழுவதும் தீப்பற்றி உள்ளது.

இதனைக் கண்ட அக்கம் பக்கத்தினர் உடனடியாக ஆலங்குடி தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்பு துறையினர் பல மணி நேரமாக போராடி தீயணைத்தனர்.

மேலும் இது ஆயில் என்பதால் இதற்கு என பிரத்தியேகமாக உள்ள தீயணைப்பு வாகனம் புதுக்கோட்டையில் இருந்து வரவழைக்கப்பட்டு தீயை ஆறு மணி நேரமாக போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் ஆலங்குடி பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# நோன்பு திறப்பு நிகழ்ச்சி




காரைக்கால் சேம்பர் ஆப் காமர்ஸ் எனும் வணிகர்கள் சங்கம் சார்பில் அதன் தலைவர் அறிவழகன் தலைமையில் நேற்று இரவு இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● திங்கள் ● மாாச் 24, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# ராமலிங்கம் எம்எல்ஏவுக்கு அமைச்சர் வாழ்த்து



பாஜக நியமன சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராமலிங்கம் பிறந்தநாள் விழாவில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம், கலந்துகொண்டு பொன்னாடை மற்றும் பூங்கொத்து வழங்கி பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்தார்.

# மதுரை பொன்முடியார் மாநகராட்சி பள்ளி ஆண்டு விழா

**மதுரை, மார்ச் 24–**

மதுரை கோரிப்பாளையம் பகுதியில் பொன்முடியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது இங்கு 500க்கு மேற்பட்ட மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இந்த நிலையில் இந்த ஆண்டிற்கான பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது தலைமையாசிரியை தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டு விழாவில் ஏராளமான பள்ளி மாணவிகள் பரதநாட்டியம், ஆடல் பாடல் என தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

மேலும் பாரம்பரிய நடனமான பரதநாட்டியம் ஆடிய முன்னாள் மாணவியினர் நடனம் அனைவரையும் வியக்கவைத்தது.

பாடல்களுக்கு ஏற்ப மாணவிகள் உற்சாகமாக நடனமாடியதை பார்த்த மாணவிகள் கைதட்டி ஆர்ப்பரித்து உற்சாகமடைந்து கொண்டாடினர்.

மேலும் கடந்த ஆண்டு 10,11, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த முறையில் தேர்வு எழுதி அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு ரொக்க தொகை பரிசு வழங்கப்பட்டது.

மாநகராட்சி பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் மாணவிகள் கலந்துகொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தியதை, ஏராளமான ஆசிரியர்களும் மாணவிகளின் பெற்றோர்களும் கண்டுகளித்தனர்.

தனியார் பள்ளியை போல மாநகராட்சி பள்ளியிலும் பள்ளி ஆண்டுவிழா விமர்சையாக நடைபெற்றது மாணவிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.






# ஓட்டல்களில் காலாவதியான உணவு விற்பனை செய்வதை கண்காணிக்க வேண்டும்

## சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு பூஜ்ய நேரத்தில் வலியுறுத்தல்

**புதுச்சேரி, மார்ச் 24–**

15வது சட்டப்பேரவையின் 6வது கூட்டத்தொடரில்.. இன்று சுயேட்சை எம்.எல்.ஏ., நேரு பூஜ்ய நேரத்தில் பேசியதாவது, மக்களின் வாழ்வியல் மாற்றம் காரணமாகவும் பொது மக்கள் அதிக பணிசுமை காரணமாக சமையல் செய்ய நேரம் இன்மையாலும், அவர்கள் பணிபுரியும் இடம் அவர்களின் வீடுகளில் இருந்து வெகு தூரத்தில் இருப்பதால் அவர்கள் உணவுக்கான ஓட்டல்கள் மற்றும் துரித உணவகங்கள் சென்று உணவு அருந்தி வருகிறார்கள்.

அப்படிப்பட்ட உணவு கூடங்கள் மற்றும் துரித கூடங்களில் சமைத்த உணவுகளை அன்றே விற்பனை செய்யாமல் குளிர்சாதன பெட்டியில் வைத்து அதை இரண்டு, மூன்று நாட்களுக்கு மேலாக வாடிக்கையாளரிடம் விநியோகம் செய்கிறார்கள்.

நகராட்சி மற்றும் கட்டுப்பாடு அதிகாரிகள், பரிசோதனையாளர்கள் உணவுகூடங்களின் செயல்பாடுகளில் கண்காணிப்பு செலுத்தாதால் மக்களுக்கு அதிக தீமைகள் ஏற்படுகிறது.

உணவுகளில் சுவைக்காகவும், நிறத்திற்காகவும், சுவைக்கான ரசாயன பொருட்கள் மற்றும் நிறத்திற்கான ரசாயன பொருட்களையும் உணவு கூடங்களில் உபயோகப்படுத்துகிறார்கள்.

அதேபோல இறைச்சி கடைகளில் கோழி மற்றும் ஆடு, மாடுகளை எந்தவித மருத்துவ பரிசோதனை மற்றும் அறிவுறுத்தல் இல்லாமல் விற்பனை செய்கிறார்கள்.

ஏற்கனவே ஆடு, மாடுகளை வெட்டுவதற்கு நகராட்சி மூலம் நடத்தப்படும் ஆட்டுப்பட்டி, மாட்டுப்பட்டிகளிலும் நகராட்சி அலுவலர் கண்காணிப்பில் ஆடு, மாடுகளை வெட்டி இறைச்சிக்கு



கொண்டு செல்லும்போது நகராட்சி முத்திரையிட்டு அனுப்புவார்கள். அது தற்போது நடைமுறையில் இல்லை. இதனால் நோய்வாய்பட்டு இறந்த ஆடு, மாடுகளை மண்ணில் புதைக்காமல் இறைச்சியாக விற்பனை செய்கிறார்கள் என்று கூறப்படுகிறது. இதை சாப்பிடும் மக்களுக்கு நோய் தொற்று உண்டாகும்.

அதேபோல பல கோழி பண்ணைகளில் நோய்வாய்ப்பட்ட கோழி இறைச்சிகளை மிக குறைந்த விலைக்கு விற்கிறார்கள். அதை உணவு கூடங்களில் வாங்கி விற்பனை செய்வதாக தெரிகிறது. அதை வாங்கி சாப்பிடும் பொதுமக்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படும் பாதிப்பு உள்ளது.

பழக்கடைகளில் மாங்காய், வாழைக்காய்களை பழமாகி பழுக்க வைப்பதற்கு ரசாயன பொருட்களை பயன்படுத்துகிறார்கள். அந்த பழங்களை வாங்கி சாப்பிடும் பொதுமக்களுக்கு உடல் உபாதைகள் ஏற்படுவதுடன் புற்றுநோய், சுவாச கோளாறு போன்ற கொடிய நோய் ஏற்படுவதாக ஆய்வில் கூறப்படுகிறது.

அதேபோல தர்பூசணி சிவப்பு நிறமாக இருப்பதற்கு ஊசி மூலம் ரசாயனத்தை உட்புகுத்தி விற்பனை செய்கிறார்கள். அதை சாப்பிடும் மக்களுக்கு நோய் பாதிப்பு ஏற்படுகிறது.

இதை நகராட்சியில் உள்ள சுகாதார பிரிவினர் மற்றும் உணவு கட்டுப்பாடு அதிகாரிகள் கட்டுப்படுத்த தவறி வருகிறார்கள். இதனால் பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகி பல நோய் தாக்கத்திற்கு உள்ளாகிறார்கள்.

நகராட்சியில் உள்ள சுகாதார பிரிவில் தற்போது கால்நடை மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர். அங்கு எம்.பி.பி.எஸ்., மருத்துவம் படித்த மருத்துவர்களை நியமிக்க வேண்டும். கடந்த காலங்களில் இறைச்சி கடைகள் மற்றும் உணவு கூடங்களில் தரமில்லாமலும், கெட்டுப்போன மற்றும் காலாவதியான உணவுகளை வைத்திருந்தால் நகராட்சியினர் பினாயிலை ஊற்றி அழித்து அந்த பொருட்கள் விற்பனை செய்வதை தடை செய்வார்கள். அதுபோல், இப்போது நகராட்சியினர் உரிய நடவடிக்கை எடுப்பதில்லை. இதனால் பொதுமக்கள் பாதிப்படைவதுடன் உடல் நலன் பெரிதும் பாதிக்கப்படுகிறது.

ஆகையால், அரசு இதை கவனத்தில் கொண்டு ஓட்டல்கள், இறைச்சி கடைகள் மற்றும் பழக்கடைகளை ஆய்வு செய்ய போதுமான உணவு கட்டுப்பாடு அதிகாரிகளை நியமித்து கலப்பட உணவு மற்றும் காலாவதி உணவு வினியோகிப்பதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# ஓபிசி கூட்டமைப்பு கூட்டம்




**புதுக்கோட்டை, மார்ச் 24–**

புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் புதுக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் தனியார் கூட்ட அரங்கில் ஓபிசி கூட்டமைப்பு கூட்டம் நடந்தது. மத்திய மண்டல செயலாளர் மூ.சரவணதேவா தலைமையில் முக்குலத்தோர் சமூகம் வழக்கறிஞர் நாகதேவன், முத்தரையர் சமூகம் சார்பாக இராம. சுரேஷ் வர்மன், பார்க்கவ குல உடையார் சமூகம் மாவட்டத் தலைவர் வேலவேந்தன், யாதவர் சமூகம் திலக் வீரபாண்டியன் எம்பி, இளங்கோவன், அனைத்து வெள்ளாளர் வேளாளர் சமூகம் நிலாமணியன், வீர சைவ சமூகம் நாராயணன், அனைத்து செட்டியார் சமூக நலச் சங்கம் ஆலங்குடி கணேசன், திருப்பதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பாலமுருகன் முதலியார் அனைவரையும் வரவேற்று பேசினார். சிறப்பு விருந்தினர்களாக பார்க்கவ குல உடையார் சங்க மாநில செயலாளர் ஆனந்த் மாணிக்கம், கள்ளர் எழுச்சி பேரவை தலைவர் ஒரத்தநாடு மூவேந்தர் செல்வராஜ், யாதவர் எழுச்சி பேரவை தலைவர் எம்சிகே சின்னத்தம்பி யாதவ், அனைத்து அகமுடையார் கூட்ட மைப்பு மாவட்ட பொறுப்பாளர் எஸ்பி ஆறுமுகம், நாயுடு சங்க தலைவர் விகே சுந்தர்ராஜன், மண்பாண்ட தொழிலாளர்கள் சங்க (குலாலர்) தலைவர் சௌந்தர்ராஜன், ஆவுடையார் கோவில் பால சுப்பிரமணியம், ஊராளி கவுண்டர் சமூகம் செல்வம், தர்மலிங்கம், மருத்துவர் சமூகம் ஹரி சலவை தொழிலாளர்கள் சமூகம் திருநாவுக்கரசு, கள்ளர் எழுச்சி பேரவை ராமச்சந்திரன், வீர சைவ பேரவை செயல் தலைவர் ஜெயராஜ், முத்திரையர் சமூக நிர்வாகிகள் ராணுவ, ஓய்வு பாளையன், ஆலங்குடி ஜெயக்குமார் மற்றும் ஏராள மானனோர் கலந்துகொண்டனர். வீர சைவ பேரவை கலாவதி முத்துக் கருப்பன் நன்றி கூறினார்.

புதுக்கோட்டை நாடாளுமன்ற தொகுதியாக செயல்பட்டு வந்ததை மீண்டும் அறிவிக்க வேண்டுமென ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப் பட்டன. காவேரி வைகை இணைப்பு திட்டத்திற்கு போர்க்கால அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்து இப்ப பணியை விரைவு படுத்தவேண்டுமென இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

# ஆனையூர் மஞ்சுவிரட்டில் வீறு கொண்டு எழுந்த காளைகளை அடக்கிய காளையர்கள்





**மதுரை, மார்ச் 24–**

மதுரை மாவட்டம் ஆனையூர் பகுதியில் பெரும்பிடுகு முத்தரையர் 1350வது சதய விழாவை முன்னிட்டு வீர பேரரசர் முத்தரையர் முன்னேற்ற சங்கம் – ஆனையூர் கிராம பொது மக்கள் – பறம்புநாடு வீர விளையாட்டு சங்கம் சார்பாக மாபெரும் வடமாடு மஞ்சுவிரட்டு நடைபெற்றது.

இவ்விழாவில் வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி கலந்துகொண்டு மஞ்சு விரட்டு போட்டியினை துவக்கி வைத்தார்.இந்நிகழ்வில் மதுரை திருச்சி சிவகங்கை புதுக்கோட்டை உள்ளிட்ட சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்து காளைகள் கலந்து கொண்டன. வீறு கொண்டு எழுந்த காளை களை காளையர்கள் அடக்கினர்.

இந்நிகழ்வில் தமிழ்நாடு ஜல்லிக்கட்டு பேரவை தலைவர் பி. ராஜசேகரன், வீரப் பேரரசர் முத்தரையர் முன்னேற்ற சங்க நிறுவனத் தலைவர் கார்த்திக்ராயர் மாநில பொதுச் செயலாளர் இளங்கோவன் மற்றும் விழா கமிட்டினர் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெற்றிபெற்ற காளைகளுக்கு கட்டில் மற்றும்கேடயங்கள் வழங்கப்பட்டது. வெற்றி பெற்ற வீரர்களுக்கு பதக்கம் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

# மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கல்

**நாமக்கல், மார்ச் 24–**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ராஜேஸ்குமார் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி ஆகியோர் முன்னிலையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 164 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.92.15 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளின் நலன் காத்திட "சிறகுகள் மாற்றுத்திறனாளிகளுக்கான தொடக்கம்" இயக்கம் மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தவும். அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் அரசின் திட்டங்கள் சென்றடையும் வகையில் சிறப்பாக செயல்படுத்தப் பட்டு வருகின்றது. தமிழ்நாடு முதலமைச்சர் மாற்றுத்திறனாளிகளின் நலன் காக்க மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களின் உதவியாளர்களுக்கு இலவசமாக இலவச பேருந்து லிமிலிலி16001 சலுகை, கோயில்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு இலவசமாக திருமணம், கடைக்கோடியில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகள் தங்கள் தேவையான நலத்திட்ட உதவிகளை பெறுவதை உறுதி செய்திடும் நோக்கில் உரிமைகள் திட்டம், மாற்றுத் திறனாளிகள் பேருந்தில் ஏறுவதற்கும், இறங்குவதற்கும் தாழ்வுதளம் போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள்.



மேலும், மாற்றுத்திறனாளி களுக்கான மருத்துவ சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, நல வாரிய சான்றிதழ், தனித்துவம் வாய்ந்த தேசிய அடையாள அட்டை வழங்கும் திட்டம் கல்வி உதவித்தொகை, பார்வைத்திறன் குறையுடையோருக்கான வாசிப்பாளர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு வேலைவாய்பற்றோர் நிவாரண உதவி தொகை, தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு சுய வேலைவாய்ப்பு பரிந்துரையுடன் மூன்றில் ஒரு பங்கு அல்லது அதிகபட்சம் ரூ.25,000 மானியம், மாற்றத்திறனாளி குழந்தைகளின் பெற்றோருக்கு மோட்டார் பொருந்திய தையல் இயந்திரம், வங்கிகளில் வட்டி இல்லா கடன் உதவி, மாவட்ட தொழில் மையத்தின் மூலம் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை உருவாக்கும் திட்டம், பாரத பிரதமரின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பினை உருவாக்கும் மானியத்துடன் கடனுதவி வழங்கப்படுகிறது.

# தற்காப்பு கலை பயிற்சி நிறைவு விழா



தூத்துக்குடி, மார்ச் 24–

தூத்துக்குடி மாவட்ட காவல்துறை மற்றும் சமூக நலத்துறை சார்பாக ‘பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்‘ என்ற திட்டத்தின் கீழ் பெண் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட தற்காப்பு கலை பயிற்சியின் நிறைவு விழா நேற்று தூத்துக்குடி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் தலைமையில் நடைபெற்றது. தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட காவல்துறை மற்றும் சமூக நலத்துறை சார்பாக “பெண் குழந்தைகளை காப்போம் மற்றும் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம்“ என்ற திட்டத்தின் கீழ் தற்காப்பு கலை பயிற்சிகள் அளிப்பதற்காக தூத்துக்குடி நகரம், கோவில்பட்டி, மணியாச்சி மற்றும் விளாத்திகுளம் ஆகிய உட்கோட்ட பகுதிகளில் மொத்தம் 4 அரசு மாணவியர் தங்கும் விடுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு தங்கியுள்ள 180 மாணவிகளுக்கு கராத்தே அடிப்படை பயிற்சி கடந்தமாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாத காலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

அதன்படி மேற்படி பெண் குழந்தைகளுக்கு அளிக்கப்பட்ட தற்காப்பு கலை பயிற்சியின் நிறைவு விழா நேற்று மணியாச்சி உட்கோட்டத்தில் சில்லாங்குளம் முத்துக்கருப்பன் மேல் நிலைப்பள்ளியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் தலைமையில் நடைபெற்றது. இதில் தூத்துக்குடி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான குற்ற தடுப்பு பிரிவு காவல்துறை கூடுதல் கண்காணிப் பாளர் தீபு உடனிருந்தார். அதேபோன்று கோவில்பட்டி உட்கோட்டத்தில் கோவில்பட்டி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தூத்துக்குடி தலைமையிடத்து காவல்துறை கூடுதல் கண்காணிப்பாளர் ஆறுமுகம் தலைமையிலும், விளாத்திகுளம் உட்கோட்டத்தில் எட்டயபுரம் பாரதியார் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் விளாத்திகுளம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அசோகன் தலைமையிலும் பயிற்சி நிறைவு விழா நடைபெற்றது.

இதில் மணியாச்சி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அருள், தூத்துக்குடி சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஜமால் உட்பட காவல்துறையினர் மற்றும் சம்பந்தப்பட்ட பள்ளிகளை சேர்ந்த ஆசிரியர்கள், மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.

# காரைக்கால் அங்கன்வாடிகளில் 4 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் பணியாளர்களை நிரந்தரம் செய்ய வேண்டும்

## காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனம் கோரிக்கை

காரைக்கால், மார்ச் 24–

காரைக்காலில் அங்கன் வாடிகளில் 4 ஆண்டுகளாக பணிபுரிந்து வரும் தற்காலிக பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். என புதுச்சேரி முதலமைச்சருக்கு, காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனம் பொதுச் செயலாளர் சேக் அலாவுதீன், இதுகுறித்து புதுச்சேரி முதலமைச்சருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையின் கடந்த 26.05.2021 தேதியிட்ட அறிவிப்பின்படி, குறைந்தபட்ச பட்டதாரி கல்வி தகுதியின் அடிப்படையில், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையில் ஒப்பந்த அடிப்படையில், 175 அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் கடந்த 4 வருடங்களாக மிசிஞ்ஷி திட்டத்தின் வழிகாட்டுதலின்படி பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றனர். இதில், காரைக்காலில் மட்டும் 50 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் குறைந்த ஊதியத்தையும் 6 மாதத்திற்கு ஒரு முறை பெற்றுக்கொண்டு பணியாற்றி வருகின்றனர். நிரந்தர அங்கன்வாடி ஊழியர்கள் மற்றும் உதவியாளர்கள் செய்யக்கூடிய பணிகளாக உள்ள ஓ பி சி கணக்கெடுப்பு, தேர்தல் துறை கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்பு, குடிமைப்பொருள் வழங்கல் துறை மற்றும் சுகாதார துறை வழங்கும் பணிகளையும் கூடுதலாக சிறப்பாக செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அங்கன்வாடியில் உள்ள காலி பணியிடங்களை நிரப்புவதற்கான பணிகளை அரசு செய்து வருவதாக தெரிய வருகிறது. அதில், இந்த தற்காலிக பணியாளர்கள் பணி செய்து வரும் 175 இடங்களையும் சேர்த்து காலி இடங்களாக கண்டறிந்து அந்த இடங்களையும் நிரப்புவதற்கான ஆயத்த பணிகள் நடைபெறுவதாக தெரிய வருகிறது. இச்செயல் குறைந்த ஊதியத்தில் அனைத்து பணிகளையும் செய்து வரும் 175 ஊழியர்களையும் மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளது.

இது சம்பந்தமாக, புதுச்சேரி முதலமைச்சரை வலியுறுத்தவும், சட்டமன்றத்தில் குரல் எழுப்பவும் வலியுறுத்தி, அமைச்சர் திருமுருகன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் நாஜிம், சிவா, சந்திர பிரியங்கா, நாக தியாகராஜன் ஆகியோரை அங்கன்வாடி தற்காலிக ஊழியர்கள் நேரில் சந்தித்து வலியுறுத்தினர்.

ஆகவே, முழு தகுதியின் அடிப்படையில் தற்பொழுது பணி செய்து வரும் 175 தற்காலிக ஊழியர்களையும் நிரந்தர பணிகளில் அமர்த்தவும், மீதமுள்ள காலி இடங்களுக்கு மட்டும் புதிதாக ஆட்களை நியமிக்கவும் வழி வகை செய்யுமாறு, காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளனம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அந்த கோரிக்கை மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# 2026 சட்டமன்ற தேர்தலில் வாய்ப்பளித்தால் மக்களுக்கு அனைத்து நலம் சார்ந்த திட்டங்களையும் பெற்றுத் தருவேன்–அதிமுக தமிழ்வேந்தன் பேச்சு

புதுச்சேரி, மார்ச் 24–

அரியாங்குப்பம் தொகுதி அதிமுக தமிழ்வேந்தன் கூறுகையில், கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அரியாங்குப்பம் தொகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் ழிஸி. காங்கிரஸ் சார்பில் பாஸ்கர் என்கின்ற தஷ்ணாமூர்த்தியை அதிமுக தொண்டர்கள் மற்றும் கூட்டணி கட்சி தொண்டர்கள் மற்றும் அரியாங்குப்பம் தொகுதி மக்கள் நாங்கள் அரும்பாடு பட்டு வெற்றி பெறச் செய்தோம்.



அவர் வெற்றிபெற்று சுமார் நான்கு ஆண்டுகள் கடந்தும் இதுவரை தொகுதி மக்களின் வளர்ச்சிக்காக எதுவும் செய்ததாக தெரியவில்லை,. தான் வெற்றி பெற்றவுடன் மகளிர் சுய உதவிக் குழுவில் உள்ள பெண்களுக்கு சொசைட்டி மற்றும் கிராம வங்கி மூலம் சிறு வியாபாரம் செய்ய லோன் வாங்கித் தருவதாக கூறினார்! செய்தாரா? அரியாங்குப்பம் புதுச்சேரி சிட்டி சென்றடைய போக்குவரத்து நெரிசலால் சிக்கி தவிக்கும் பள்ளி மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்பவர்கள், மற்றும் அவசர சிகிச்சைக்கு செல்பவர்கள் நிலை அறிந்து அதற்கென்று ஏதேனும் ஆளுகின்ற தன் சொந்த கட்சி முதல்வரிடம் சென்று ஏதேனும் மனு அளித்தாரா அல்லது சட்டமன்றத்தில் இதற்கு குரல் கொடுத்தாரா?

தொகுதியில் உள்ள படித்த பட்டதாரிகளுக்குஏதேனும் வேலை வாய்ப்பு முகாமை ஏற்படுத்திக் கொடுத்துள்ளாரா? அதற்கு மாறாக தொகுதியில் கஞ்சா மற்றும் மதுபான கடைகளை உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளார்!

அரியாங்குப்பம் தொகுதியில் நிலத்தடி நீரானது, நாளுக்கு நாள் உப்பு கலந்த நீராக மாறி வருகிறது அதை அருந்தும் அனைத்து மக்கள் மற்றும் குழந்தைகள் பல நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். அதற்காக ஏதேனும் புதிய சுத்திகரிப்பு நிலையம் அமைக்க சட்டமன்றத்தில் குரல் கொடுத்தாரா?

தொகுதியில் குற்றப் பின்னணியில் உள்ளவர்களை கண்டறிந்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி ஏதேனும் காவல்துறையிடம் மனு அளித்தாரா?

இதற்கு மாறாக என் ஆர் காங்கிரஸ் எம்எல்ஏ என்பதை மறந்துவிட்டு பிஜேபி எம்எல்ஏ போல் செயல்பட்டு வருகிறார். தொகுதிக்கு எதுவுமே செய்யாத சட்டமன்ற உறுப்பினர் ஒரு பக்கம் வெறும் பணம் மட்டும் இருந்தால் போதும் நாம் நின்று வெற்றிபெற்று விடலாம் என்ற குறுகிய எண்ணத்தோடு சில காங்கிரஸ் கட்சி பிரமுகர்கள் ஒரு பக்கம், இவர்களுக்கு மத்தியில் மக்களுக்காகவே தொடர்ந்து குரல் கொடுத்து வருவதோடு மட்டுமின்றி கடந்த 2024 பாராளுமன்றத் தேர்தலில் அரியாங்குப்பம் தொகுதியில் பிறந்து வளர்ந்த எனக்கு அதிமு கழகப் பொதுச் செயலாளர் தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார், என்னை பரிந்துரை செய்த புதுச்சேரி மாநிலக் கழக செயலாளர் அன்பழகன், அரியாங்குப்பம் தொகுதியின் முதல் பாராளுமன்ற வேட்பாளர் என்ற மாபெரும் ஒரு பெருமையை அரியாங்குப்பம் தொகுதி மக்களுக்கு சேர்த்தனர். மீண்டும் 2026இல் நடக்க இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கழகம் வாய்ப்பு அளித்தால் அரியாங்குப்பம் தொகுதி மக்களின் வீட்டுப் பிள்ளையாகவும், ஒரு சாதாரண தொண்டனாகவும் சட்டமன்றத்தில் போராடி நம் மக்களுக்கு தேவையான அனைத்து நலம் சார்ந்த திட்டங்களையும் பெற்றுத் தருவேன்.

# பெண்களிடம் பணம், செல்போனை வழிப்பறி செய்த ஒருவர் கைது



காரைக்கால், மார்ச் 24–

காரைக்கால் நாகை தேசிய நெடுஞ்சாலை மற்றும் நகர் பகுதியில் என மூன்று இடங்களில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணிடம், பணம் செல்போன் அடங்கிய பை வழிப்பறி செய்த இளைஞரை நிரவி போலீசார் கைது செய்தனர்.

காரைக்கால் தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள மஸ்தான் பள்ளி வீதியை சேர்ந்தவர் அகமது சா மனைவி ஜெகமர் பாத்திமா (58). இவர் நேற்று முன்தினம் இரவு கணவர் அகமதுசாவுடன், ரம்ஜான் பண்டிகைக்காக நாகூர் தர்காவில் வழங்கும் துணியை வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்று உள்ளனர். மோட்டார் சைக்கிளை அகமதுசா ஓட்ட, ஜெகபர் பாத்திமா பின்னால் அமைந்திருந்தார். நாகை காரைக்கால் தேசிய நெடுஞ் சாலையில், நிரவி நாகூர் மெயின் ரோடு அருகே சென்ற பொழுது, திடீரென பின்பக்கம் மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு மர்ம நபர்கள், ஜெகபர் பாத்திமா மடியில் வைத்திருந்த வெள்ளை கலர் ரெக்சின் கை பையை பிடுங்கி உள்ளனர். அவர் சுதாரித்து பேக்கை இழுத்த பொழுது, மர்ம நபர் பேக்கை வேகமாக பிடுங்கி கொண்டு சென்றுள்ளார். இதில் கணவன் மனைவி இருவரும் மோட்டார் சைக்கிளேரடு விழுந்தனர். இதில் காயம் அடைந்த ஜெகபர் பாத்திமாவை கணவர் அகமது சா மீண்டும் அதே மோட்டார் சைக்கிளில் காரைக்கால் அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார். அங்கு முதலுதவி பெற்ற இருவரும் வீடு திரும்பினர். தொடர்ந்து உறவினர்களுடன் கலந்து பேசி நேற்று அதிகாலை நிரவி காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். புகாரில், வழிப்பறியில் பறிகொடுத்த பேக்கில் 1450 ரூபாய் பணம், செல் பான் மற்றும் வீட்டு சாவிகள் இருந்ததாக குறிப்பிட்டுள்ளார். அந்த புகாரின் பேரில் மோட்டார் சைக்கிளில் வழிப்பறி செய்து சென்ற மர்ம நபர்கள் மீது, இரண்டு பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து தேடி வந்தனர். இதேபோல் கடந்த 19ஆம் தேதி மாலை திருநள்ளாறு சாலையில் ரூபாய் 8000 மதிப்பிலான செல்போன் பேசியவாறு நடந்து சென்ற திருநள்ளார் ரோடு மரியம் அவன்யூ பகுதியை சேர்ந்த அஸ்மா (75) என்பவரிடம், மோட்டார் சைக்கிளில் சென்ற மர்ம நபர்கள் செல்போனை வழிப்பறி செய்தார். மேலும் நகர் பகுதியில் பெண் ஒருவரிடம் இதே போன்ற மர்ம நபர் செல்போனை வழிப்பறி செய்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் காரைக்காலில், நாகை காரைக்கால் தேசிய நெடுஞ்சாலை, திருநள்ளார் சாலை மற்றும் நகர் பகுதியில் என மூன்று இடங்களில் கைப்பை செல்போன் உள்ளிட்டவைகளை வழிப்பறி செய்த இளைஞரான விருதாச்சலம் செட்டி தெருவை சேர்ந்த, காரைக்கால் தனியார் துறைமுகத்தில் டவர் ஆபரேட்டராக வேலை செய்து வந்த லெனின் மகன் மகேஷ் (19) என்பவரை நிரவி போலீசார் நேற்று கைது செய்தனர். அவருக்கு துணையாக இருந்தவரை போலீசார் தேடி வருகின்றனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# பத்தமடை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை: முதல்வருக்கு நன்றி





நெல்லை, மார்ச் 24–

நெல்லை மாவட்டம் பத்தமடை பேரூராட்சி தலைவர் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் சந்தித்து பத்தமடை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை, ஆய்வகம் கட்டிடம் மற்றும் கழிப்பறை வசதிகள் கட்டுவதற்கு சுமார் 3.30 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து சிறுபான்மை நலத்துறை மூலம் றிவியிக்ஷிரி திட்டத்தில் அனுப்பப்பட்டது. இது வட்டார அளவில், மாவட்ட அளவில் மாநில அளவில் ஒப்புதல் பெற்று இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு இந்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. இது ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் ஒன்றிய அரசின் நிர்வாக அனுமதி கிடைக்காததால் இடம் வசதி இன்றி படிக்கட்டிலும், வராண்டாவிலும் மாணவிகளின் நலன் கருதி தமிழக அரசின் நபார்டு திட்டத்தில் அல்லது ஏதாவது ஒரு திட்டத்தில் மேற்படி பள்ளி கட்டிடம் அமைய மனு வழங்கப்பட்டது.



மனுவை ஏற்று தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் மாநில அரசின் ஏதாவது ஒரு திட்டத்தில் மேற்படி பள்ளி கட்டிடம் கட்டுவதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படும் என கூறியுள்ளார்கள்.

மேலும் சிறுபான்மை நலத்துறை அமைச்சரிடம் இதே கோரிக்கையை வைத்தோம். அமைச்சர் றிவியிக்ஷிரி திட்டத்தில் காலதாமதம் ஆகும் பட்சத்தில் மாநில அரசின் நபார்டு திட்டத்தில் அல்லது வேறு ஏதாவது ஒரு திட்டத்தில் மேற்படி பள்ளி கட்டிடம் அமைய இந்த மனுவை மறுநாளே பள்ளிக்கல்வித்துறை அமைச்சரிடம் நடைபெறும் கூட்டத்தில் வழங்கி ஏற்பாடு செய்யப்படும் என உறுதி கூறினார்.

மனுவை ஏற்று மாநில அரசின் நபார்டு திட்டத்தில் மேற்படி பள்ளி கட்டிடம் அமைய நடவடிக்கை மேற்கொள்ள ஆவணம் செய்த தமிழக பள்ளிக் கல்வித் துறை அமைச்சருக்கும், சிறுபான்மை நலத்துறை அமைச்சருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே கோரிக்கையை திருநெல்வேலி முதன்மை கல்வி அலுவலரிடம் வழங்கினோம். அவர்களும் தமிழக அரசின் நபார்டு திட்டத்தில் பள்ளி கட்டிடம் அமைய ஏற்பாடு செய்வதாக கூறினார்கள். அவர்களும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் நெல்லை வருகை தந்தபோது அவர்களிடம் மகளிர் பள்ளி கட்டிடம் அமைய மனு அளிக்கப்பட்டது. அந்த மனுக்கான பதில் மனுவில் முதன்மை கல்வி அலுவலகத்தில் இருந்து மாணவிகளின் நலன் கருதி றிவிரிக்ஷியி திட்டம் மற்றும் தமிழக அரசின் நபார்டு திட்டத்திலும் பரிந்துரை செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள பட்டதாக பதில் மனு வந்துள்ளது. இது சம்பந்தமாக இரண்டு நாட்களுக்கு முன்பாக தொலைபேசி வாயிலாகவும் தொடர்பு கொண்டு பேசினார்கள். நாம் பத்தமடை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி கட்டிடம் அமைய இது வரை எடுத்துள்ள நடவடிக்கைகள் கூறினோம். அவர்கள் நம்முடைய முயற்சிகளுக்கு வாழ்த்துக்கள் கூறினார்கள். இதற்கு முன் பள்ளி கட்டிடம் அமைய இடம் இல்லாமல் இருந்தது. நம்முடைய முயற்சியில் பள்ளிக்கு எதிராக உள்ள சுகாதாரத்துறை கட்டிடம் பள்ளி கல்வித்துறைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டது. அதன் மூலம்தான் தற்போது தமிழக அரசின் திட்டத்தில் மேற்படி கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழக முதல்வருக்கு மிக்க நன்றி.

E-mail:maalaiexpresspdy@gmail.com
மாலை எக்ஸ்பிரஸ்
● திங்கள் ● மார்ச் 24, 2025

# சீட்டு நடத்துபவர்கள் அரசிடம் வைப்புத் தொகை செலுத்த வேண்டும்

## பூஜ்ய நேரத்தில் சம்பத் எம்.எல்.ஏ., பேச்சு



**புதுச்சேரி, மார்ச் 24–**

தனிநபர் சீட்டு நடத்துபவர்கள் அரசிடம் வைப்புத் தொகை வைக்க வேண்டும். மீறுபவர்கள் மீது பணம் மோசடி வழக்கு பதிய வேண்டும் என பூஜ்ய நேரத்தில் சம்பத் எம்.எல்.ஏ., வலியுறுத்தினார்.

இதுகுறித்து சட்டசபையில் முதலியார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் சம்பத் இன்று பேசியதாவது, புதுச்சேரியில் பல தனி நபர்கள் தீபாவளி சீட்டு உள்ளிட்ட பல வகையான சீட்டுகள் பிடித்து வருகின்றனர். இவர்களிடம் பொதுமக்கள் ஏராளமானோர் சேர்ந்து பணம் செலுத்துகின்றனர். சீட்டு பிடிப்பவருக்கு ஏதேனும் பொருளாதார சரிவு ஏற்படும் போது அவரிடம் சீட்டு பணம் செலுத்தியவர்களுக்கு பணம் திரும்ப கிடைப்பது பெரும் சவாலாக உள்ளது. இதனால் பாதிக்கப்படும் பலர் தற்கொலை செய்யும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இவற்றை தடுக்க சீட்டு பிடிப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை அரசிடம் வைப்புத் தொகையாக வைக்க வேண்டும் அரசின் அனுமதி பெற்று சீட்டு நடத்த வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் சீட்டு நடத்துபவர்கள் மீது பணம் மோசடி வழக்கு பதிவு செய்ய வேண்டும். இதனால் பொதுமக்களின் பணம் பாதுகாப்பாக இருக்கும். பொதுமக்கள் பாதிக்கப்படுவதும் குறையும். இவ்வாறு அவர் பேசினார்.

# இஃப்தார் நோன்பு நிகழ்ச்சி



மேலச்செவல் பேரூராட்சியில் இரு ஜமாத் இஸ்லாமிய மக்களால் நடத்தப்பட்ட சமூக நல்லிணக்க இஃப்தார் நோன்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் திமுக பொதுக்குழு உறுப்பினர் ஆ. பிரபாகரன், சேரை கிழக்கு ஒன்றிய செயலாளர் முத்து பாண்டியன் (எ) பிரபு, மேலச்செவல் பேரூராட்சி மன்ற தலைவர் அன்னபூரணி ராஜன், மேலச்சேவல் பேரூர் கழகச் செயலாளர் மணிகண்டன் மற்றும் திமுகவின் பேரூர் கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், அனைவரும் கலந்துகொண்டு இஸ்லாமிய பெருங்குடி மக்களின் இஃப்தார் நோன்பு நிகழ்ச்சிக்கு வாழ்த்துரை வழங்கினார்கள்.

# மலச்செவல் பேரூராட்சியில் புதிய பேருந்து சேவை துவக்கம்




**நெல்லை, மார்ச் 24–**

நெல்லை மாவட்டம் மேலச்செவல் பேரூராட்சியில் தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் அறிவுறுத்தலின் படி திருநெல்வேலி கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் மற்றும் தலைமைச் செயற்குழு உறுப்பினர் பிரபாகரன் ஆகியோரின் ஆசியுடன் மேலச்செவல் பேரூராட்சி மக்களின் வசதிக்காக புதிய பேருந்து முதல் இயக்கப்பட்டது. இந்நிகழ்வில் மேலச்செவல் பேரூராட்சி தலைவர் அன்னபூரணி ராஜன் தலைமையில், மேலச்செவல் பேரூர் கழக செயலாளர் மணிகண்டன் முன்னிலையில் அவைத் தலைவர் வேல்முருகன், மாவட்ட பிரதிநிதி கந்தசாமி, வார்டு செயலாளர்கள், நல்ல ராசு, வெள்ளப்பாண்டி, தங்கப்பாண்டி, சுப்பிரமணியன், மைதீன், பிச்சை, ஆர். சுப்பிரமணியன், ஒன்றிய பிரதிநிதி முருகன் மற்றும் தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கந்தவேல், துணை அமைப்பாளர் ப்பிரமணியன் என்ற சௌந்தர் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டனர்.

# அங்கன்வாடி பணியாளர்கள் தேர்வு எப்போது?-அமைச்சர் கீதா ஜீவன் பதில்

**சென்னை, மார்ச் 24–**

தமிழக சட்டசபையில் கடந்த 14ந்தேதி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது. மறுநாள் வேளாண் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து பட்ஜெட் மீதான விவாதங்கள் நடந்தது. பட்ஜெட் மீதான எம்.எல்.ஏ.க்களின் கருத்துகள், கோரிக்கைகளுக்கு நிதித்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, வேளாண்மைத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் கடந்த 21ந்தேதி சட்டசபையில் பதில் அளித்து பேசினர்.

அதனைத்தொடர்ந்து சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை சட்டசபைக்கு விடுமுறை அளிக்கப்பட்டது. இதையடுத்து இன்று முதல் சட்டசபையில் துறைவாரியாக மானியக்கோரிக்கை மீதான விவாதம் நடக்க இருக்கிறது. இந்த நிலையில் இன்று தமிழக சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, மலையம்பட்டு கிராமத்தில் குழந்தைகள் மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும், காலியாக உள்ள பணியாளர்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் சட்டமன்ற உறுப்பினர் பாபு கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த, அமைச்சர் கீதா ஜீவன், மலையம்பட்டு கிராமத்தில் புதிதாக அங்கன்வாடி மையம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை என்று தெரிவித்தார். மேலும், அங்கன்வாடி பணியாளர்களை தேர்வு செய்வதற்கான அரசாணை கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்டு ள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பா.ம.க. சட்டமன்ற உறுப்பினர் எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்த, அமைச்சர் சத்துணவு பணியாளர்களை தேர்வு செய்ய அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ள தாகவும், இன்னும் ஒரு மாதத்தில் பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

**தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்**

# லஞ்ச வழக்கில் தலைமைப் பொறியாளர் கைது

# அமைச்சர் பதவி விலகக் கோரி பேரவையில் தர்ணா

## திமுக., காங்கிரஸ் உறுப்பினர்களை வெளியேற்ற சபாநாயகர் அதிரடி உத்தரவு



**புதுச்சேரி, மார்ச் 24–**

புதுச்சேரி சட்டப்பேரவை இன்று காலை 9.30 மணிக்கு கூடியது. சபாநாயகர் செல்வம், கேள்வி நேரத்தை தொடங்கினார்.

அப்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் சிவா, லஞ்ச வழக்கில் புதுச்சேரி தலைமைச் செயலாளருக்கு இணையாக பணியாற்றிய பொதுப்பணித் துறை தலைமைப் பொறியாளர் தீனதயாளன் உள்ளிட்ட அதிகாரிகளை சி.பி.ஐ., அதிகாரிகள் கைது செய்துள்ளனர். இது புதுச்சேரி அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும். இதற்கு தார்மீக பொறுப்பேற்று பொதுப்பணித்துறை பொறுப்பு வகிக்கும் அமைச்சர் லட்சுமிநாராயணன் பதவி விலக வேண்டும். இதுகுறித்து பேரவையில் விவாதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அதற்கு சபாநாயகர் செல்வம் அனுமதி அளிக்க மறுத்தார்.

இதனையடுத்து, இதை கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் சிவா, துணைத் தலைவர் ஏ.எம்.எச். நாஜிம், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, சம்பத், செந்தில்குமார், நாக. தியாகராஜன், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் வைத்தியநாதன் மற்றும் ரமேஷ் பரம்பத் ஆகியோர் பேரவையின் மைய மண்டபத்தின் நடுவில் அமர்ந்து தர்ணாவில் ஈடுபட்டனர்.

அப்போது பேரவைத் தலைவர் செல்வம் தர்ணாவில் ஈடுபட்டவர்களை குண்டுகட்டாக வெளியேற்ற சபைக் காவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் சபைக் காவலர்கள் தர்ணாவில் ஈடுபட்ட திமுக மற்றும் காங்கிரஸ் உறுப்பினர்களை குண்டு கட்டாக தூக்கி வெளியேற்றினர். இதனால் அவையில் சிறிது நேரம் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.



பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் சிவா, ‘புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் தீனதயாளன், செயற்பொறியாளர் ஆகியோர் ரூ.7 கோடி ஒப்பந்தத்திற்கு லஞ்சம் வாங்கியபோது காரைக் காலில் சி.பி.ஐ., அதிகாரிகளால் சுற்றிவளைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். இது புதுச்சேரி மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது. காரைக்காலில் ஒரு ஒப்பந்த பணிக்கு இவ்வளவு முறைகேடு நடந்திருக்கிறது. தலைமைப் பொறியாளரின் பணிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அனைத்தும் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இந்த விவகாரத்தில் புதுச்சேரி அரசு என்ன செய்யப்போகிறது என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். அதற்காகத்தான் பேரவையில் விவாதிக்க அனுமதி கோரினோம். ஆனால், பேரவைத் தலைவர் ஆளும் அரசுக்கு ஆதரவானவர் என்பதால் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. அனுமதி அளிக்க வலியுறுத்தி தொடர்ந்து திமுக., காங்கிரஸ் உறுப்பினர்கள் தர்ணாவில் ஈடுபட்டோம். அதற்கும் செவிமடுக்காத பேரவைத் தலைவர் எங்களை குண்டு கட்டாக தூக்கி வெளியேற்ற உத்தரவிட்டார். அதன்படி நாங்கள் சபைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டோம்.

பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர் அலுவலகம் சீல் வைக்கப்பட்டுள்ளதால் பொதுப்பணித்துறைகளில் அனைத்து பணிகளும் முடங்கிப்போய் உள்ளது. பேரவையில் அத்துறை சம்பந்தமாக எழும் கேள்விக்கு யார் பதிலளிப்பார்கள். ஆகவே, பொதுப்பணித்துறைக்கு அமைச்சராக இருக்கும் லட்சுமிநாராயணன் தார்மீக பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோரினோம். எங்கள் கோரிக்கையை மதிக்காமல் சபையை தொடர்ந்து நடத்துகிறார்கள். இதையெல்லாம் மக்கள் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிகாரிகள் மக்கள் பணத்தில் உண்டுக்கொழுத்து சாப்பிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது. தவறு செய்யும் அதிகாரிகள் மீது கடும் சட்டம் இயற்றி தண்டிக்க அரசு தவறிவிட்டது. இந்த விவகாரத்தில் நீதி கிடைக்கும் வரை நாங்கள் தொடர்ந்து போராடுவோம்.

இதுதொடர்பாக துறை அமைச்சர் ராஜினாமா செய்யக்கோரி போராட்டம் நடத்துவோம். பொதுப்பணித்துறையில் நடைபெற்ற பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட கேட்போம். குறிப்பாக தரமாக இருந்த புதிய பஸ் பேருந்து நிலையத்தை இடித்துவிட்டு மோசமான நிலையில் பலகோடி செலவு செய்துள்ளனர். ஆனாலும், மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர முடியாத நிலை உள்ளது. பொதுப்பணித்துறை மற்றும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் பல குளறுபடிகள் நடந்துள்ளது. தொடர்ந்து சி.பி.ஐ.,யின் நடவடிக்கையை கண்காணித்து அதற்கு தகுந்தார்போல் எங்களின் போராட்டம் இருக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து ஆட்சியர் பொதுமக்களிடம் கலந்துரையாடல்

**கன்னியாகுமரி, மார்ச் 24–**

கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்துக்குட்பட்ட கேரளபுதூர் பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா நேரில் சந்தித்து கலந்துரையாடி தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர் நகர்ப்புற பகுதிகளில் 5 ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சேபனையில்லா அரசு புறம்போக்கு நிலங்களில் வீடுகட்டி குடியிருக்கும் பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்டம் கல்குளம் வட்டத்துக்குட்பட்ட திருவிதாங்கோடு பகுதியில் அரசு நிலத்தினை ஆக்கிரமித்து குடியிருப்பு அமைந்துள்ள நிலமில்லாதவர்களுக்கு ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தி இலவச வீட்டுமனை பட்டா வழங்குவது குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டதோடு,



குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடப்பட்டது. அவர்களில் தகுதியானவர்களுக்கு பட்டா வழங்க வருவாய்த்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டஉள்ளது. இவ்வாறு தெரிவி தார்கள். நடைபெற்ற ஆய்வில் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, கல்குளம் வட்டாட்சியர் சஜித், துறை அலுவ லர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# தமிழக எம்.பி.க்களுடன் பிரதமரை சந்திக்க முடிவு-மு.க.ஸ்டாலின்





# புதுச்சேரி சட்டசபையில் இருந்து எதிர்கட்சிகள் வெளியேற்றம்

# நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளி


மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



Website: www.maalaiexpress.com

• 24-3-2025 திங்கள்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்